4, 3, 97 ஐப்பசி — 93
நல்லூர் ... யாழ்ப்பாணம்

Registered as a Newspaper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | புரட்டாதி 16 | [02-10-1993] | சனிக்கிழமை | ஓசை 226

## க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தாய்மொழி, கலாசாரம் பாடமாகும்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான தற்போதைய நான்கு பாடங்களும் மூன்றாகக் குறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக தாய்ப் பாஷை (தமிழ், சிங்களம்) கலாசாரம், ஆங்கிலம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும். மாணவர் மத்தியில் தாய்ப்பாஷை. ஆங்கிலம், கலாசாரம் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு மூன்று பாடங்கள் போதுமானதாகும் என்று கல்வி அமைச்சு கருதுகிறது. இது சம்பந்தமாக ஆராய்வதற்கென பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு, பல்கலைக் கழக உபவேந்தர்கள், பீடாதிபதிகள், கல்வி உயர் அதிகாரிகள் ஆகியோரின் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இதில் தாய்ப் பாஷைக்கு 50 புள்ளிகளும், கலாசாரத்திற்கு 30 புள்ளிகளும், ஆங்கிலத்திற்கு 20 புள்ளிகளும் வழங்கப்படும். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நான்கு (4ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சியில் அகோர விமானத் தாக்கு; எரிபொருள் நிலையங்கள் தீப்பற்றி எரிந்தன

## பாடசாலை, வீடுகள் சேதம் 6 பேர் காயம்: மாணவர் தப்பினர்

[தென்மராட்சி]

தென்மராட்சியின் பல பகுதிகளில் நேற்றும் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்களும், உலங்குவானூர்திகளும் தாக்குதலை நடத்தின. "புக்காரா" மற்றும் சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய இத் தாக்குதலில் பாடசாலை, வீடுகள் சேதமடைந்ததோடு எரிபொருள் விற்பனை நிலையங்கள் பலவும் தீப்பற்றி எரிந்தன. ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 11.45 மணியளவில் சாவகச்சேரிப் பகுதிக்கு வந்த புக்காரா குண்டு வீச்சு விமானமும் உலங்குவானூர்தி ஒன்றும் றொக்கட் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் நடாத்தின.

இதனால் வீதியோரமாக அமைந்திருந்த பல எரிபொருள் நிலையங்கள் முற்றாக எரிந்து சாம்பராகின. தபால் கந்தோர் பகுதியில் வீழ்ந்து வெடித்த றொக்கட் குண்டினால் தபால் நிலைய ஊழியர்கள் இருவர் படுகாயமடைந்ததுடன் மேலும் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகினர். டிறிபேக் கல்லூரிப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலினால் பாடசாலை அதிபர் அலுவலகமும் சிறுவர் பராமரிப்பு சிகிச்சை நிலையமும் சேதமடைந்ததுடன் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் கார் ஒன்றும் மினிபஸ் ஒன்றும் பலத்த சேதமடைந்ததுடன் பல வீடுகளும் சேதமடைந்தன.

பாடசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டவேளை ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்லூரியில் காணப்பட்டனர். இவர்

இதே வேளை சிறிலங்கா விமானப்படைக்குச்சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்கள் 1.30 மணியளவில் பளை, எழுதுமட்டுவாழ் பகுதியை சுற்றி குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. 1ஆவது இரண்டாவது குண்டுகள் எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதியில் உள்ள தென்னம் காணிக்குள் விழுந்தது. 3ஆவது குண்டு அப்பகுதியில் இருந்து சற்று தொலைவில் உள்ள

[4ஆம் பக்கம் பார்க்க]

## சாவகச்சேரி தாக்குதலில் 6 பொதுமக்கள் காயம்

[தென்மராட்சி]

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக்காலையும் மாலையும் சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய தாக்குதல்களினால் அறுவர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் புக்காரா விமானம் நடாத்திய றொக்கற் தாக்குதலினால் சாவகச்சேரி தபால் ... யோர் படுகாயமடைந்ததுடன் தோமஸ் என்பவரும் மற்றுமொருவரும் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

இதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று பாதசாரிகளை நோக்கி வீசிய எறிகுண்டு வீழ்ந்து வெடித்ததில் மகாலிங்கம் (வயது45), ஜெயக்

## வீரச்சாவு

புலோப்பளைப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சமரில் கப்டன் மகி



... தாக்குதலில் பாடசாலை, வீடுகள் சேதமடைந்ததோடு எரிபொருள் விற்பனை நிலையங்கள் பலவும் தீப்பற்றி எரிந்தன. ஆறு பொது மக்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 11.45 மணியளவில் சாவகச்சேரிப் பகுதிக்கு வந்த புக்காரா குண்டு வீச்சு விமானமும் உலங்குவானூர்தி ஒன்றும் றொக்கட் தாக்குதல்களையும் கலிபர் தாக்குதல்களையும் நடாத்தின.

இதனால் வீதியோரமாக அமைந்திருந்த பல எரிபொருள் நிலையங்கள் முற்றாக எரிந்து சாம்பராகின. தபால் கந்தோர் பகுதியில் வீழ்ந்து வெடித்த றொக்கட் குண்டினால் தபால் நிலைய ஊழியர்கள் இருவர் படுகாயமடைந்ததுடன் மேலும் இருவர் சிறு காயங்களுக்குள்ளாகினர். டிறிபேக் கல்லூரிப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலினால் பாடசாலை அதிபர் அலுவலகமும் சிறுவர் பற் சிகிச்சை நிலையமும் சேதமடைந்ததுடன் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் கார் ஒன்றும் மினிபஸ் ஒன்றும் பலத்த சேதமடைந்ததுடன் பல வீடுகளும் சேதமடைந்தன.

பாடசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டவேளை ஆயிரக் கணக்கானமாணவர்கள்கல்லூரியில் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் நாலாபுறமும் சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடிக்கொண்டனர். இதனால் எதுவித காயமுமின்றி மாணவர்கள் மயிரிழையில் தப்பித்துக் கொண்டனர்.

இதே வேளை சிறிலங்கா விமானப்படைக்குச்சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்கள் 1.30 மணியளவில் பளை, எழுதுமட்டுவாழ் பகுதியை சுற்றி குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. 1ஆவது இரண்டாவது குண்டுகள் எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதியில் உள்ள தென்னம் காணிக்குள் விழுந்தது. 3ஆவது குண்டு அப்பகுதியில் இருந்து சற்று தொலைவில் உள்ள

[4ஆம் பக்கம் பார்க்க]

## சாவகச்சேரி தாக்குதலில் 6 பொதுமக்கள் காயம்

[தென்மராட்சி]

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக்காலையும் மாலையும் சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய தாக்குதல்களினால்அறுவர்காயமடைந்தனர்


நேற்றுக்காலை 11.30 மணியளவில் புக்காரா விமானம் நடாத்திய றொக்கற் தாக்குதலினால் சாவகச்சேரி தபால் கந்தோர் ஊழியர்களான கிராம்புவிலைச் சேர்ந்த பரமநாதன் குகன் [வயது 24], மற்றும் சாவகச்சேரி கச்சாய்வீதியைச் சேர்ந்த நடராசா ஜெயக்குமார் [வயது 27] ஆகியோர் படுகாயமடைந்ததுடன் தோமஸ் என்பவரும் மற்றுமொருவரும் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

இதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று பாதசாரிகளை நோக்கி வீசிய எறி குண்டு வீழ்ந்து வெடித்ததில் மகாலிங்கம்(வயது45), ஜெயக்குமார்[வய.19] படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காகயாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [86] [சி]

## வீரச்சாவு

புலோப்பளைப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சமரில் கப்டன் மகிழன்/வினோ (சூரிசிவம் கல்மடு பூம்புகார் வவுனியா) வீரச்சாவடைந்தார். மேலும் இம் மோதலில் விழுப்புண் அடைந்திருந்த 2-ம் லெப்டினன்ட் காவேரி (இராசேந்திரன் சூரியகலா பண்டத்தரிப்பு. தற்போதைய முகவரி ஆனந்தபுரம் கல்வியங்காடு) எனும் போராளி நேற்று வீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



புலோப்பளை வரலாற்றுச் சமரில் சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

# வடமராட்சியில் ஹெலிதாக்கு ஒருவர் பலி; நால்வர் காயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் நேற்று உலங்கு வானூர்தி ஒன்று ஏவிய றொக்கட் தாக்குதலுக்கு ஒரு இளைஞன் பலியானார். இரு பெண்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

பலாலி நோக்கி சென்றுகொண்டிந்த மூன்று உலங்கு வானூர்திகளில் ஒரு உலங்கு வானூர்தி வீதியால் சென்றவர்கள் மீது தாக்கியதால் செல்வராசா பவுணன் (வயது 15) என்பவர் பலியானார். மற்றும் இராமசாமி சிவலிங்கம் (வயது 87), சாம்பசிவம் சிறிகுமார் (வயது 14), இளையதம்பி யோகலட்சுமி(வயது25) மதிவதனி (வயது 24) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் மாலை 5. 30 மணிக்கு மேற்கொண்ட இத் தாக்குதலில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களே பாதிப்படைந்தனர். (யோ)



கப்டன் மகிழன் (வினோ)



2-ம லெப. காவேரி



புலோப்பளையில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட டாங்கியின் அருகில் சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலத்தை படத்தில் காணலாம்

# முற்றுகையை இறுக்கி தமிழரை அடிபணியவைப்பதே நோக்கம்

## லோறன்ஸ் திலகர்

(லண்டன்)

''சிறிலங்கா அரசைப் பொறுத்தவரையில் இனப் பிரச்சினை இல்லை என்பதும் தமிழர்களை அடிமைகளாக வைத்திருப்பதுமே நோக்கம். இதற்கு தடையான மக்களை காக்கும் விடுதலைப் புலிகளை அழிப்பதே அரசின் குறிக்கோள் எனவே தமிழீழத்தின் தலைபோன்ற குடாநாட்டின் கழுத்தை நெரிப்பதன் மூலம் மக்களை துன்பப் படுத்துவதன்மூலம், பொருளாதார தடையை இறுக்குவதன் மூலம் அரசு இனப்படுகொலையை சாதிக்கலாம் என எண்ணுகின்றது. இவ்வடிப் படையிலேயே தற்போதைய படையெடுப்பை அரசு மேற்கொண்டுள்ளது.'' இவ்வாறு விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்த லோறன்ஸ் திலகர் பி. பி. ஸிக்கு நேற்று தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

நிலத்தை பிடிப்பதல்ல நோக்கம். புலிகளை அதிகளவில் கொல்வதே தமது நோக்கம் என இராணுவம் கூறுகின்றதே என்று கேட்டபோது திலகர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

''கிளாலிப் பாதையை பொதுமக்களே அதிகம் பயன் படுத்துகின்றனர். புலிகளை பொறுத்தவரையில் கிளா

[4ஆம் பக்கம் பார்க்க]

## இடைவிடாத விமானப் பறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் வான் பரப்பில் சிறிலங்கா விமானப் படையினரது விமானங்கள் நேற்று இரவு முழுவதும் ஓய்வின்றி அங்கு மிங்குமாக பறந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக தென்மராட்சிப் பகுதி மற்றும் யாழ். நகரப்பகுதி வான்பரப்பு மீதும் இவ் விமானங்கள் பறந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது. (க)

## பதுங்கியிருந்து தாக்கியதில் ஒரு போராளி வீரச்சாவு

மட்டக்களப்பு மகிழவெட்டுவான் கற்குடா எனும் இடத்தில் கடந்த சனியன்று பதுங்கியிருந்த சிறில்ங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசவிரோதிகளும் நடாத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவரும், முழுநேர ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் கவிதரன் நல்லவன் [இளையதம்பி நல்லரத்தினம், செங்கலடி, மட்டக்களப்பு], முழுநேர ஆதரவாளர் சிவம்[பன்குடாவெளி] ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

இச் சம்பவத்தில் மகிழவெட்டுவானைச் சேர்ந்த ஒருபிள்ளையின் தந்தையாகிய செல்வநாயகம் அரியநாயகம் என்பவரும் பலியானார்.

## வரி விளம்பரம்


**விற்பனைக்குண்டு**

சில்க்கி இன சேவல் + பேடு சீமை முயல்கள் (2மாதம்) விற்பனைக்குண்டு. தொடர்பு த. செல்வக்குமார். சந்திரசேகர பிள்ளையார் கோவிலடி நல்லூர் வடக்கு. (சி.7524)

**மெடிக்கேற்றற் சோப்**

மெடிக்கேற்றற் சோப் ஓர் மில்க்வைற் தயாரிப்பு. தொற்றுநோய்க் கிருமிகளிலிருந்து பாதுகாக்கும் காபோலிக் சேர்ந்தது மெடிக்கேற்றற் சோப் கட்டி ஒன்று ரூபா. 8/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகின்றது. மில்க்வைற் (சி/7529)

**மிருதங்கம்**

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டு தரப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார் பெருமாள்கோவிலடி யாழ்ப்பாணம். (6147)

**நாம்பன்கன்றுகள் விற்பனைக்குண்டு**

எமது பண்ணையில் உள்ள நாம்பன்கன்றுகள் கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. வாங்குவோர் 10. 10. 93-ம் திகதிக்கு முன் கூறுவிலையை சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி. (சி-7531)


**இலவச மீட்டல் வகுப்பு**

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தென்மராட்சி ஓய்வூதியர் சங்கத்தினர் இலவச கணிதபாட மீட்டல் வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

பிரதி சனிக்கிழமைகள் தோறும் சாவகச்சேரியில் நடைபெறவுள்ள இவ்வகுப்புகளில் பங்குபற்றவிரும்புவோர் உடன் சங்கப் பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

**உற்சவம்**

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம்

# யாழ். குடாநாட்டில் மாவீரர்களுக்கு அஞ்சலிகள்

புலோப்பளை அல்லிப்பளை உக்கிரமோதலில் தம்முயிரை அர்ப்பணித்து வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு யாழ். குடாநாடு எங்கும் மக்கள் அஞ்சலி செலுத்தினர். வீதிகள் தோறும் கறுப்பு கொடிகளும் தோரணங்களும் கட்டப்பட்டு இருந்தன.

மாவீரர்களின் வித்துடல்கள்நேற்று முன்தினம்பிற்பகல் வலிகாமம் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில்அஞ்சலிக்காகவைக்கப்பட்டன.

புலோப்பளை - அல்லிப்பளை பகுதியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற புலிகள்- இராணுவ மோதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களில் பதினான்கு பேரின் அஞ்சலிநிகழ்வும்நினைவுக்கூட்டமும்நேற்றுமுன்தினம்மாலை சுன்னாகம் மத்திய சந்தைப் பகுதியில் நடைபெற்றது.

வீரச்சாவடைந்த 14 மாவீரர்களின் வித்துடல்கள் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தன. மாலை3.00 மணியிலிருந்து அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்த இம் மாவீரர்களின் வித்துடல்களுக்கு பெருந்தொகையான மக்களும் போராளிகளும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சுன்னாகம் சந்தைப் பகுதி தோரணங்களாலும் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. வலிகாமம் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பொழிலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா, யாழ். மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிரமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, திரு. சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றினர்.

அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் பாண்ட் இசைக்கப்பட்டுஇறுதி ஊர்வலம் ஆரம்பமானது. மக்கள் வீதி இருபுறமும் நின்று மலரஞ்சலி செய்தனர். மருதனார்மட சந்தி இணுவில் கோண்டாவில் வீதி வழியாக கோண்டாவில் சந்தியை அடைந்து கோப்பாய் மாவீரர் துயில் இல்லத்தில் வித்துடல்கள் விதைக்கப்பட்டன.

தென்மராட்சிப்பகுதியில் 15 மாவீரர்கள் வித்துடல்கள் நேற்று முன்தினம் மாலை 4 மணிமுதல்சாவகச்சேரிமகளிர் கல்லூரியில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கந்தண்ணா தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. கலைபண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் சேரலாதன், பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் சுடரவள் மன்னார் தொடர்பக பொறுப்பாளர் பிரேம் திரு. தேவர் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். புகழுடல்கள் பின்னர் ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்பட்டு மாவீரர் துயில் இல்லத்தில் விதைக்கப்பட்டன. (09,11)

## 6.5 மில். ரூபாவை கடனாக மக்கள் வங்கி வழங்கியது; பிராந்திய முகாமையாளர் தகவல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுய தொழில் வேலை வாய்ப்புக்காக மக்கள் வங்கி 6.5 மில்லியன் ரூபாவை கடந்த ஒன்பது மாதங்களிலும் வழங்கியிருப்பதாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இச் சுயதொழில் வாய்ப்புக்காக 685 பேருக்கு கடன் வழங்கப்பட்டிருப்பதாகவும், இதில் சுமார் 98 வீதமான தொகை மீள அறவீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதன் மூலம் இன்றும்பலருக்கு கடன்களை வழங்கக் கூடியதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்

சுயதொழில் கடன்களில் இரண்டு மில்லியன் ரூபாக்களை மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை வழங்கியிருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ள அவர் இக்கடன் திட்டம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கபபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## விழிப்புலனற்றோர் முன்னேற சமுதாயம் உதவவேண்டும்

### – சமூகசேவை அத்தியட்சகர்

விழிப்புலனற்றவர்களின் மேம்பாட்டுக்காக சமுதாயம் ஆக்கபூர்வமான வழிகளில் உதவ முன்வர வேண்டும். அதேவேளை விழிப்புலனற்ற ஒவ்வொருவரும் தமக்கு முன்னாலிருக்கும் தடைகள் அனைத்தையும் தாண்டி வாழ்வில் முன்னேற திடசங்கற்பம் பூணவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண பிராந்திய சமூக சேவை அண்மையில் நடைபெற்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்தபொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; விழிப்புலன் இழந்த பலர் வாழ்வில் முன்னேறி நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

சங்கத் தலைவர் ரவீந்திரன்

**பரிசளிப்பு விழா**

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித பத்திமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் கந்தசாமியும், கௌரவ விருந்தினராக வன்னிப் பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் து. மனோவும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் பொன். சபாபதி, உருத்திரபுரம் பங்குத் தந்தை அ. சகாயதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் விழாவுக்கு வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரிய கொறற்றி தலைமை தாங்கவுள்ளார்.

**பிற்போடப்பட்டது**

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் இன்று நடைபெறவிருந்த சுகாதார வார நிறைவு நாளும் பரிசளிப்பு வைபவமும் நாட்டு நிலைமை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் வேதநாயகன் அறிவித்துள்ளார்.

**விளையாட்டு மைதானம்**

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு செம்பியன் பற்று உப அலுவலக பகுதியில் சுமார் 1, 50, 000ரூபா செலவில் பொது விளையாட்டு மைதானம் ஒன்று இப் பகுதி மாணவர்களின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் நன்நோக்குடன் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**குழாய்க் கிணறு அமைப்பு**

பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலகத்திற்கு அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்று நீர் விநியோக ஆரம்பவிழாகடந்த திங்களன்று பிரதேச சபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் தலைமையில்நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு. சி. முருகேச பிள்ளை நீர் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். மரம் நாட்டும் விழாவும் இடம்பெற்றது [25]

**கணிதவள நிலையம்**

வடமராட்சி கிழக்கில் யா/ செம்பியன் பற்று அ. த. க. பாடசாலையில் மேற்படி வள நிலையத்தை வடமராட்சிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பார் திரு. எஸ். செல்லத்துரை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து வடமராட்சி கிழக்கில் இரண்டு முழு நாட்கள் கணித விஞ்ஞான ஞான செயலமர்வினை மாவட்ட கணித விஞ்ஞான மூல வள நிலையத்தினர் மேற்கொண்டனர் மாணவர்கள் காட்டிய ஆர்வம் காரணமாக வானியல் பாசறை விளக்கொளியில் கேத்திர கணிதச் செயலமர்வு என்பனவும் நடாத்தப்பட்டன.

**யாழ் றோட்டரி விருது பெற்றது**

யாழ்ப்பாண றோட்டரிக் கழகம் கடந்த ஆண்டில் ஆற்றிய கழகப் பணிகளுக்காக விருது வழங்கப்பட்டுள்ளது. றோட்டரி சர்வதேச கழகத்தின் தலைவரின் கழக சேவைகளுக்கான இவ் விருது கொழும்பலுள்ள றோட்டரி ஆளுநருக்கு அனுப்பவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைத் தளபாடம் திருடியோர் பிடிபட்டனர்

(பருத்தித்துறை)

இரவு வேளையில் பாடசாலை ஒன்றிலிருந்து தளபாடங்களைத் திருடிக் கொண்டு சென்று கொண்டிருந்த இரு திருடர்கள் கையும் மெய்யுமாக இளைஞர் கோஷ்டியொன்றிடம் சிக்கிக்கொண்டபோ மடக்கிப் பிடிக்கப்பட்டு தமிழீழ காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

புலோலி அமெரிக்கன்மிஷன் பாடசாலை (மந்திகை)யிலிருந்தே மாணவர்களது பாவனைத் தளபாடங்களான இத் தளபாடங்கள் திருடப்பட்டன திருடர்கள் சைக்கிளில் இம் மேசை கதிரைகளைக்கட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த வாகன வெளிச்சமொன்று திருடர்களின் செயலை வீதியால் சென்ற இளைஞர்கோஷ்டிக்குக் காட்டிக் கொடுத்தது. உடனடியாக திருடர்களை மடக்கிப்பிடித்த இளைஞர் கோஷ்டி பருத்தித்துறை தமிழீழ காவல்துறைக்குத் தகவல் கொடுத்து அவர்களை அழைத்து வந்து திருடர்களையும், திருட்டுத் தளபாடங்களையும் ஒப்படைத்தது. பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் இத்திருடர்களுக்கு எதிரான வழக்கை பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினர் தாக்கல் செய்துள்ளனர். (25)

## அம்பாறையில் கடும் வரட்சி குடிநீருக்கும் மக்கள் அவதி

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு கடும்வரட்சி நிலவுகின்றது. கிராமத்திலுள்ள கிணறுகளும், குளங்களும் முற்றாகவே வற்றிப்போய் இருப்பதால் கரையோரப் பகுதி மக்கள் குடிநீருக்காக திண்டாட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஒரு வகையான சிரங்கு நோய் மக்கள் மத்தியில் இங்கு பெருமளவில் பரவி வருவதாகவும், காட்டு மிருகங்கள் பலவும் குடிநீர் தேடி ஊர்மனைக்குள் புகுந்து நாசம் புரிவதாகவும், குறிப்பாக காட்டுயானைகள் பெரும் சேதத்தை விளைவித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதனால் சேனைப் பயிர்ச்செய்கை இங்கு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

## கறுப்பு நாடுகளின் பட்டியலில் சிறிலங்காவும் சேர்ப்பு

### –அநுரா குறே

(கொழும்பு)

சிறிலங்கா மனித உரிமைகளைப் பேணுவதில் மிகவும் பின்தங்கி இருக்கின்றது, இவ்வாறு பிரிட்டனின் நீதிபதி அநுரா குறே கூறியுள்ளார். இலங்கையில் பிறந்த பிரிட்டன் வாசியான இவர் அண்மையில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் மேலும், கூறுகையில்: சரியா பிழையாஎன்பதை விட பிரிட்டனில் இத்தகைய அபிப்பிராயம் தான் மேலோங்கி இருக்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பொதுவாகவும், இலங்கையில் குறிப்பாகவும் மனித உரிமை மீறல்கள் பெரும் அளவில் இடம் பெறுகின்றன. இதனால் கறுப்பு பட்டியலில் சிறிலங்காவும் இங்கு சேர்க்கப்பட்டு விட்டது

பிரிட்டனின் முடிக்குரியநீதி மன்றத்தில் நியமனம் பெற்றிருக்கும் முதலாவது வெள்ளையர் அல்லாதவர் என்பதுடன் இந்நியமனம் பெற்ற முதலாவது ஆசியர் என்பதும் முதலாவது இலங்கையரும் அநுரா குறே என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.


**முக்கிய அறிவித்தல்**

புங்குடுதீவு நயினாதீவு ப.நோ கூ சங்கம் (வ து)

**கிளைக் குழுத்தேர்தல் - 1993**

இன்று (02- 10- 1993-ம் திகதி சனிக்கிழமை) நடைபெறவிருந்த கிளைக் குழுத் தேர்தல் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ள ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தென்மராட்சி ஒய்வூதியர் சங்கத்தினர் இலவச கணிதபாட மீட்டல் வகுப்புகளை நடத்தவுள்ளனர்.

பிரதி சனிக்கிழமைகள் தோறும் சாவகச்சேரியில் நடைபெறவுள்ள இவ்வகுப்புகளில் பங்குபற்றவிரும்புவோர் உடன் சங்கப் பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## உற்சவம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 10ஆம் ஞாயிற்றுக்கிழமை வரை மகா சண்டி ஹோம உற்சவம் சிறப்பாக இடம்பெறவுள்ளது. (24)

## கௌரவிப்பு

(தொல்புரம்)

செஞ்சிலுவைச் சங்க வலி மேற்கு பிரிவு போஷகராகிய அருட்திரு கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் கௌரவிக்கப்படவுள்ளார். இக் கௌரவிப்பு வைபவம் இன்று பிற்பகல் 3.30 மணியளவில்வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலைஆரம்பபிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதென தொல்புரம் மேற்கு அலகின் தலைவர் சி. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (41)

## இடமாற்றம்

(வடமராட்சி)

யாழ். செயலக காணி ஆணையாளர் திணைக்கள சிரேஷ்ட வெளிக்களப் போதனாசிரியராக கடமையாற்றிய மூவர் குடியேற்ற உத்தியோகத்தர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

ம. அந்தோனிப்பிள்ளை, பொ. தில்லைநாதன், சி. ஒப்பிலாமணி, ஆகியோரே பதவி உயர்வு பெற்று கோப்பாய், உடுவில், மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (யோ)

## சிரமதானம்

[நெல்லியடி]

இமையாணன் மேற்கு துவாளி கட்டுக்குளம் கடந்த வாரம் அப்பகுதி மக்களினால் சிரமதானம் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 125 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட இக்குளம் அழிவுற்ற நிலையில் இருந்தமையால் மீண்டும் மேட்டுப் பயிர்ச் செய்கைக்காகவும், கால்நடைகளின் தாகத்தினைப் போக்குவதற்கும் ஆழமாக்கப்பட்டுள்ளது. [03[

மம் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பொழிலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா, யாழ். மாவட்ட அரசியற் பிரிவுப்

மூலம் இன்றும்பலருக்கு கடன்களை வழங்கக் கூடியதாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்

சுயதொழில் கடன்களில் இரண்டு மில்லியன் ரூபாக்களை மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை வழங்கியிரு

# விழிப்புலனற்றோர் முன்னேற சமுதாயம் உதவவேண்டும்

**– சமூகசேவை அத்தியட்சகர்**

விழிப்புலனற்றவர்களின் மேம்பாட்டுக்காக சமுதாயம் ஆக்கபூர்வமான வழிகளில் உதவ முன்வர வேண்டும். அதேவேளை விழிப்புலனற்ற ஒவ்வொருவரும் தமக்கு முன்னாலிருக்கும் தடைகள் அனைத்தையும் தாண்டி வாழ்வில் முன்னேற திடசங்கற்பம் பூணவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண பிராந்திய சமூக சேவைகள் பிரிவு உதவி அத்தியட்சகர் திருமதி க. சிவசிதம்பரம் தெரிவித்தார். கைதடி நவில்ட் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்தபொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; விழிப்புலன் இழந்த பலர் வாழ்வில் முன்னேறி நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

சங்கத் தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதியநிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

சனிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் கந்தசாமியும், கௌரவ விருந்தினராக வன்னிப் பிராந்திய அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் து. மனோவும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சிக் கோட்டகல்விப் பணிப்பாளர் பொன். சபாபதி, உருத்திரபுரம் பங்குத் தந்தை அ. சகாயதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர் விழாவுக்கு வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரிய கொறற்றி தலைமை தாங்கவுள்ளார்.

ஞான செயலமர்வினை மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தினர் மேற்கொண்டனர் மாணவர்கள் காட்டிய ஆர்வம் காரணமாக வானியல் பாசறை விளக்கொளியில் கேத்திர கணிதச் செயலமர்வு என்பனவும் நடாத்தப்பட்டன.

## யாழ் றோட்டரி விருது பெற்றது

யாழ்ப்பாண றோட்டரிக் கழகம் கடந்த ஆண்டில் ஆற்றிய கழகப் பணிகளுக்காக விருது வழங்கப்பட்டுள்ளது. றோட்டரி சர்வதேச கழகத்தின் தலைவரின் கழக சேவைகளுக்கான இவ் விருது கொழும்பலுள்ள றோட்டரி ஆளுநருக்கு அனுப்பவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அநுரா குறே கூறியுள்ளார். இலங்கையில் பிறந்த பிரிட்டன் வாசியான இவர் அண்மையில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் மேலும், கூறுகையில்: சரியா பிழையாஎன்பதைவிட பிரிட்டனில் இத்தகைய அபிப்பிராயம் தான் மேலோங்கி இருக்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பொதுவாகவும், இலங்கையில் குறிப்பா

பிரிட்டனின் முடிக்குரியநீதி மன்றத்தில் நியமனம் பெற்றிருக்கும் முதலாவது வெள்ளையர் அல்லாதவர் என்பதுடன் இந்நியமனம் பெற்ற முதலாவது ஆசியர் என்பதும் முதலாவது இலங்கையரும் அநுரா குறே என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

---

# 1-ம் ஆண்டுநினைவு அஞ்சலி



தாயின் மடியில்
02 04 1975

தாயக மண்ணில்
02-10-1992

திதி: 21-10 1993

## 2-ம் லெப். மங்கை (தர்ஷா)

(பாமினி சிவநாதன் சித்திரமேழி இளவாலை)

இளமைக் கனவுகள் இதயத்தில்
இடந்தேடும் பருவத்தில் தமிழ்
ஈழ இலட்சியம் பெரிதாய்
சுமந்து.... நீ சென்றாய் புலியாய்

தானைத்தலைவன் வழிகாட்ட
தளராத துணிவோடு தர்ஷா
மானத்தோடு போராடி மறப்புலியாய்
மாண்டாயோ கட்டைக்காட்டில்

சிங்களப்படை சிதறடித் தோட
தங்கத் தமிழன் தலையது நிமிர
வங்கக் கடலுனை வாழ்த்தி ஒலிக்க
மங்கை! நீ மலர்ந்தாய் தமிழ்
-மண்ணுக்காக

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்

உன் நினைவில் வாடும்
சித்திரமேழி
-மக்கள்-

சித்திரமேழி
பழனியானந்தன்
சன சமூக நிலையம்
இளவாலை.

(6135)

---

# பரிசுச் சீட்டிழுப்பு

செப்டம்பர் மாதத்துக்குரிய மாதாந்த பரிசுத்திட்ட சீட்டிழுப்பு இன்று 02-10-93 காலை 11 00 மணிக்கு இடம்பெறும்

**எழிலகம்,**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-7530)

---

# 1 ஆம் ஆண்டு நினைவாக



தாயின் மடியில்
1976- 08- 04

தமிழ் மண்ணின் வித்தாக
1992 10 02

## வீரவேங்கை இளமாறன்

[சிறில் லக்ஸ்மன் ஜெகன்]
கட்டைக்காட்டில் வீரச்சாவடைந்தார்

உன் கனவுகள் நினைவாகட்டும்
உன் இலட்சியம் நிறைவேறட்டும்
இந்த மண்ணைக்காத்த வீரனே
உன் நினைவு எம்மை விட்டு அகலாது.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரருக்கும் எமது அஞ்சலிகள். சகபோராளிகள், உற்றார், உறவினர் அனைவரையும் இன்று எமது இல்லத்திற்கு வருகை தரும்படி அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

36, புதிய கடற்கரை,
வேளாங்கண்ணி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (6128)

---

# முக்கிய அறிவித்தல்

**புங்குடுதீவு நயினாதீவு ப.நோ கூ சங்கம் (வ து)**

## கிளைக் குழுத்தேர்தல் - 1993

இன்று (02-10-1993-ம் திகதி சனிக்கிழமை) நடைபெறவிருந்த கிளைக் குழுத் தேர்தல் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நா குலநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்.

(சி-7534)

---

# நினைவுகூருகின்றோம்...

## 1993-10-02

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

★ **மகேஸ்** [மகேந்திரன் - மட்டு]

1986ஆம் ஆண்டு திருமலை சாம்பல்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கெங்கா** [ஆனந்தராஜா சுந்தரராஜா - கும்புறுப்பிட்டி- திருமலை]

1987ஆம் ஆண்டு திருமலை - 4-ம் கட்டைப் பகுதியில் சிங்களக் காடையர்களினால் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1988ஆம் ஆண்டு யாழ். சிறுப்பிட்டிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான (பல்கலைக்கழக மாணவன்)

**நந்தன்** (.. ... ...)

1990ஆம் ஆண்டு மட்டு. புதுக்குடியிருப்புக்கும், தாழங்குடாவிற்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்,

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-7528]

### சிந்தனைக்கு

காலத்தால் கனிந்து விட்ட கருத்தின் வல்லமைக்கு எந்தச் சேனையும் ஈடுகொடுக்க இயலாது.

விக்டர் ஹ்யூகோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## டி. பி க்கு மூதலடி!

டி. பி. விஜேதுங்கா தலைமையிலான சிங்களப் பேரினவாத அரசு தமிழ்மக்களுக்கெதிரான புதிய போர்முனை ஒன்றைத் திறந்துள்ளது. 10 000 துருப்புக்கள், டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் தொடக்கப்பட்ட இப்போர்முனைக்கு, சிறிலங்கா விமானப் படையும், கடற்படையும் தமது முழுப்பலத்தையும் திரட்டி உதவி வருகின்றன.

இப் பாரிய தாக்குதலின் நோக்கம் யாழ் குடாநாட்டை முற்றுகை இடுதலும், வசதிப்படும் அளவில் இனப்படுகொலை புரிவதும் என சம்பவங்கள் உணர்த்துகின்றன. யாழ். குடா நாட்டு மக்கள் தற்பொழுது பிரதான நிலப்பரப்புடன் தொடர்பு கொள்ளும் கடல் வழிப்பாதையான கிளாலிப பாதை நோக்கி இராணுவம் நகர்வதும், அப்பாவித் தமிழ்மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டுவீசி அவர்களைக் கொல்வதும் மேற்கூறிய காரணங்களை விளங்கிக் கொள்ளப் போதுமானவையாகும்.

சிறிலங்கா இராணுவம் யாழ். குடா நாட்டை முற்றுகையிட்டு இராணுவ ரீதியாக தமிழர் போராட்டத்தை வெற்றி கொள்ளவென எடுக்கப்படும் மூன்றாவது முயற்சி இதுவாகும். 1991 ஒக்டோபரில் ஒப்பரேசன் வலம்புரி மூலம் பூநகரிப் பாதையை மூடிய இராணுவம், 1992 யூலையில் ஒப்பரேசன் பலவேகய II இன் மூலம் கொம்படிப் பாதையை மூடியது தற்பொழுது ஒப்பரேசன் 'யாழ்தேவி" மூலம் கிளாலிப் பாதையை மூடிவிடத் துடிக்கின்றது.

சிங்கள அரசாங்கத்தின் இம்முற்றுகை முயற்சியானது, தமிழ்மக்களின் பொருளாதாரம் மற்றும் போக்குவரத்து முயற்சிகளை முடக்கி தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தோற்கடிப்பதற்கான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. தமிழ்மக்களையும் தமது நாட்டு மக்கள் எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசு இந் நடவடிக்கை மூலம் அவர்களின் அடிப்படை உரிமைகள் யாவற்றையும் முற்றாகப் பறிக்க முற்படுகின்றது.

சிங்களப் பேரினவாதம் இவ்வாறு செயற்படுவதென்பது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல. எவ்வாறேனும் தமிழ்மக்களின் தேசிய

# இனவாதக் கும்பலையிட்டு அச்சம் தேவையில்லையாம்

## சு.கட்சி எம்.பி.சொல்லுகிறார்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்குள் இருக்கும் இனவாதக் கும்பலையிட்டு அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திசநாயக்கா கூறியுள்ளார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொன்விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இந்நாட்டில் உள்ள பல கட்சிகளிலும் இனவாத சக்திகள் இருப்பது போன்றே, சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் ஓர் இனவாதக் கும்பல் இருக்கின்றது. எனினும் சுதந்திரக் கட்சியை பொறுத்தமட்டில் தமிழர்களுக்கு பிரச்சினை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வதுடன் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளது என்று தெரிவித்தார்.

அத்துடன் சுதந்திரக் கட்சியின் கடந்தகால ஆட்சியில் பலதவறுகள், பிழைகள் நடந்திருக்கலாம் ஆனால் இன்றைய ஐ. தே. கவைப் போல லட்சக்கணக்கானோரை உள்நாட்டில் அகதிகளாக்கி பலரை வெளிநாடுகளில் தஞ்சமடையச் செய்யவில்லை என்றும்,

இன்றைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததும் தமிழர் பிரச்சினை மற்றும் பல பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்று பிரசாரம்செய்தார்கள் ஆனால் ஜனாதிபதியோ தமிழர்களுக்கு இந்நாட்டில் பிரச்சினையே இல்லை எனசாதிக்கிறார் என்றும் தெரிவித்தார்.

## கிளைகளை புனரமைப்பதில் சுதந்திரக் கட்சி ஈடுபாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை புனரமைக்கும் வேலைகள் மாத்தளை மாவட்டத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்சியைப் புனரமைப்புச் செய்து புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்வதும் பழைய அங்கத்தவர்கள் மத்தியில் கட்சியை வளர்ப்பதற்கான உற்சாகத்தை ஊட்டுவதுமே இந் நடவடிக்கையின் நோக்கமாகும். என்று கட்சியின் முக்கியத்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் இந்த வேலைத்திட்டம் முதல் கட்டமாக மாத்தளை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் இன்னும் சில காலத்தில் நாடு முழுமைக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதற்காக சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்கள் பலரும் பலஇடங்களில் இருந்தும் மாத்தளைக்கு வந்திருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல யசரத்ன தென்னக்கோன், மகிந்தஅபயக்கோன், நந்தி மித்திர ஏக்கநாயக்க அநுருத்தரத்வத்த ஆகியோர் இவ் வைபவத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

## ஜனாதிபதிக்கு நன்றி திருமதி ஹேமா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தான் தற்போது மகிழ்ச்சியாக இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார்.

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள ஸ்ரன்மோர் கிரசன்ட் இல்லத்தில் தற்போது குடியேறி இருக்கும் அவர் கடந்த சில வாரங்களாக தமது இல்லத்தின் தளபாட அமைப்புகளில் தீவிர கவனம் செலுத்தியதாகவும் ஐலண்ட் பத்திரிகையாளரிடம் மேலும் தெரிவித்தார்.

ஜூலை முதல் திகதி ஜனாதிபதிமாளிகையைவிட்டுவெளியேறிய பின்னர் ஸ்ரன்மோர் கிரசன்ட் இல்லத்திலும் தமது கணவரின் இல்லமான விஜேராம மாவத்த வீட்டிலும் வசித்து வந்ததாகவும் குறிப்பிட்டதோடு விஜேராம மாவத்த இல்லம் இப்போது தமது மகனின் பொறுப்பில் விடப்பட்டு தான் முழுமையாக இங்கு குடியேறியிருப்பதாகவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அதுபற்றி தான் திருப்தி கொண்டிருப்பதாக கூறினார். எனினும் இச்சந்திப்பின்போது அரசியல் விவகாரங்கள் பற்றியோ, சேவா வனிதா இயக்கம் பற்றியோ எதையும் கூற மறுத்து விட்டார்.

## பொலிசார் சோதனை

[கொழும்பு]

பதுளை நகரில் இருக்கும் தமிழர்களுக்கு சொந்தமான கடைகள் அனைத்தும் அண்மையில் பொலிசாரின் தீவிர பரிசோதனைக்கு இலக்காகியது. அதிகாலை நான்கு மணியளவில் இக் கடைகளை முற்றுகையிட்ட பொலிசார் அங்கிருந்த சகலரையும் தீவிர புலன் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

## குடிநீர் வழங்கலை விரிவாக்க மாநகரசபை முயற்சி

குருநகர் புனித யாகப்பர் ஆலய கிணற்றில் இருந்து கிடைக்கும் குடிநீரை குருநகர் கடற்கரை வீதினூடாக தொடர்மாடி வரை விஸ்தரிப்பதற்கான குழாய் அமைக்கும் பணியில் யாழ். மாநகரசபை நீர் வழங்கும் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ். மாநகரசபை நீர்வழங்கும் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் அண்ணாசிலை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ள குழாய் மேலும் விஸ்தரிக்கப்படுவதாகவும் குருநகரின் குறுக்கு வீதிகளுக்கும் விஸ்தரிக்க போதியளவு குழாய்கள் யாழ். மாநகரசபையிடம் கைவசம் இல்லை எனவும் இவர் தெரிவித்தார். [17]

## மேலும் சில மாவீரர்களின் உருவப்படங்கள் வெளிவந்துள்ளன

ஆ.க.வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்கள் உருவப்படங்களும், கடற்கரும்புலிகள் நால்வரின் படங்களும் அண்மையில் வெளிவந்துள்ளன.

01. லெப். கேணல் சூட்டி சின்னத்தம்பி இராசு செல்வேந்திரன் சாவகச்சேரி.
02. 2-ம் லெப் பழனி அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ் பருத்தித்துறை.
03. லெப். கருணா நடராசா குகேந்திரன் மணலாறு.
04. வீ.வே. கேதீஸ் சுப்பிரமணியம் விஜயதாசன் சுழிபுரம்.
05. வீ.வே. அருச்சுனா சுப்பிரமணியம் சுரேஸ்குமார் மீசாலை வடக்கு.
06. கப்டன் திலகா ரதீஸ்வரி இராசதுரை திருமலை.
07. வீ.வே. அனுசன் தேவசகாயம் குணசிங்கம் குருநகர்.
08. கப்டன் அகிலன் வேலன் மோகனசிறி கைதடி மேற்கு.
09. வீ.வே. சுந்தரமூர்த்தி சிவகுரு கிருஷ்ணபவான் சுன்னாகம்.
10. கப்டன் ரகீம் / ஜசாக் டொனால்ட் வீரபாகு அளவெட்டி தெற்கு.
11. வீ.வே. சூரியகலா குமுதினி நடராசா கரவெட்டி மத்தி.
12. 2-ம் லெப். ரகு அன்ரனி பெஞ்சமின் மன்னார்.
13. கப்டன் ஜஸ்ரின் கிருஷ்ணபிள்ளை சுதாகர் பருத்தித்துறை.
14. 2-ம் லெப், ஜோன் இராஜேந்திரம் உதயகுமார் திருமலை.
15. கப்டன் அங்கதன் ஜெயதிலகா நிசாந்தன் சுன்னாகம்.
16. கப்டன் வண்டு சுப்பிரமணியம் யோகேஸ்வரன் தாளையடி.
17. லெப். ரவியப்பா சுப்பிரமணியம் உருத்திரன் மன்னார்.
18. வீ.வே. ரட்ணா கந்தையா விக்னேஸ்வரன் கொடிகாமம்.
19. 2-ம் லெப். காண்டீபன் வைரவப்பிள்ளை உமாநேசன் தாளையடி.
20. வீ.வே. கபூர் தங்கவேல் நடேசன் கிளிநொச்சி.
21. வீ.வே. சுதா அர்ச்சுன் மகேந்திரன் திருமலை.
22. வீ.வே. டலஸ் குழந்தைவேல் ஜெயரட்ணம் கிளிநொச்சி.
23. வீ.வே. பரணி முத்துவேல் காந்தலிங்கம் வேலணை,
24. வீ.வே. மாயவன் சங்கரப்பிள்ளை கனகசிங்கம் கொடிகாமம்.
25. வீ. வே. நிசாந்தன் இளையதம்பி பிறேமசிறி நல்லூர், யாழ்.
26. லெப். சித்திக் தவானந்தவேல் விக்னேஸ்வரன் வல்வெட்டித்துறை.
27. கப்டன் அல்பேட் கந்தசாமி வன்னியசிங்கம் சாவகச்சேரி.
28. வீ. வே. விநாயகன் சித்திரவேல் மோகன் மட்டக்களப்பு.
29. திசைவீரன் சற்குணநாதன் சற்குணபேசன் கொடிகாமம்.
30. வீ. வே. ராவ் சின்னையா யோகேஸ்வரன் மட்டக்களப்பு.
31. வீ. வே. தயா பாரதிதேவி செல்லையா யாழ்ப்பாணம்.
32. வீ. வே. சுபத்திரா வாணி புவனேந்திரன் வல்வெட்டித்துறை.
33. லெப். காண்டி கனகரத்தினம் கனகேஸ்வரன் மாங்குளம்.
34. லெப். யூசி ஆறுமுகம்பிள்ளை சிறிசுந்தரம் வல்வெட்டித்துறை.
35. 2-ம் லெப். வாசு தேசிங்கம் தமிழ்ச்செல்வன் உடுப்பிட்டி.
36. வீ. வே. சுபாசினி புஸ்பரஞ்சினி (புஸ்பா) சுப்பிரமணியம் தாளையடி.
37. வீ. வே. கபிலன் மார்க்கண்டு குகமூர்த்தி மானிப்பாய்.
38. வீ. வே. சத்தியன் பூர்வானந்தஈஸ்வரசர்மா பாலரூப சர்மா துன்னாலை.
39. வீ.வே. குட்டியா சாந்தநாயகி விசுவலிங்கம் சாவகச்சேரி.
40. றெஜினோல்ட் சந்தனமேரி கணேஸ் மட்டக்களப்பு.
41. லெப். தர்மன்/ரவி இராசதுரை ரவீந்திரகுமார் கோப்பாய்.
42. வீ. வே. அனுசா ஜெசிந்தா குமாரசாமி ஏழாலை.
43. வீ. வே. கலாதரன் மாணிக்கம் தர்மராசா திருமலை.
44. வீ. வே. ரகீம்/சகீம் நாகலிங்கம் ஜெகதாஸ் உரும்பராய்.
45. வீ. வே. சரத்பாபு நவரெத்தினம் கோபிநாத் கொக்குவில்.
46. கப்டன் கீர்த்தி வீரப்பாபிள்ளை கனகேஸ்வரன்

டத்தை வெற்றி கொள்ளவென எடுக்கப்படும் மூன்றாவது முயற்சி இதுவாகும். 1991 ஒக்டோபரில் ஒப்பரேசன் வலம்புரி மூலம் பூநகரிப் பாதையை மூடிய இராணுவம், 1992 யூலையில் ஒப்பரேசன் பலவேகய II இன் மூலம் கொம்படிப் பாதையை மூடியது தற்பொழுது ஒபரேசன் 'யாழ்தேவி" மூலம் கிளாலிப் பாதையை மூடிவிடத் துடிக்கின்றது.

சிங்கள அரசாங்கத்தின் இம்முற்றுகை முயற்சியானது, தமிழ்மக்களின் பொருளாதாரம் மற்றும் போக்குவரத்து முயற்சிகளை முடக்கி தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தோற்கடிப்பதற்கான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. தமிழ்மக்களையும் தமது நாட்டு மக்கள் எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசு இந் நடவடிக்கை மூலம் அவர்களின் அடிப்படை உரிமைகள் யாவற்றையும் முற்றாகப் பறிக்க முற்படுகின்றது.

சிங்களப் பேரினவாதம் இவ்வாறு செயற்படுவதென்பது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல. எவ்வாறேனும் தமிழ்மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விட வேண்டும் என்பதில் குறியாக உள்ள சிங்களப் பேரினவாதம், போராட்டத்தைத் தோற்கடிக்க எந்தப் பேயுடனும், எப்பொழுதாயினும் கூட்டுச் சேரும் என்பது தெரிந்து விடயமே. இந்நிலையில் அதுவும் இலங்கையில் தமிழருக்கு பிரச்சினை என்பதே இல்லை என்ற டிங்கிரி பண்டாவின் ஆட்சியில் தமிழர் மீது தாக்குதல் ஒன்று தொடுக்கப்படுவதில் எதுவித ஆச்சரியமும் இல்லை.

ஆனால், சிங்களப் பேரினவாதத்திற்கு போர் முனையில் விடுதலைப் புலிகளிடம் இருந்து கிடைத்த பதிலடியானது பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. முப்படைகளின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு பாரிய நடவடிக்கையை சிறு ரக ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்து நின்று சிறிலங்கா இராணுவத்திற்குப் பேரழிவை ஏற்படுத்திய விடுதலைப் புலிகளின் துணிவுகண்டு சிறிலங்கா இராணுவம் அதிர்ந்து போயுள்ளது.

புலோப்பளையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போரானது தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் முக்கியமானதொன்று என்பதில் சந்தேகமில்லை. பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினரை பகற்பொழுதில் எதிர்கொண்டு மோதி, பெரும் சேதத்தை விளைவித்த போராகும். இதுவரையிலான நேரடி மோதல்களில் இவ்வளவு பெரிய அளவில் துருப்புக்களையும், இராணுவ தளபாடங்களையும் சிறிலங்கா அரசு இழக்கவில்லை. இத்தாக்குதலானது விடுதலைப் புலிகளின் மனவுறுதிக்கும் போரிடும் ஆற்றலுக்குமான எடுத்துக் காட்டாகும்.

இதேவேளை, புலிகள் கொடுத்த பதிலடி டிங்கிரிபண்டாவின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கைக்கு விழுந்த முதல் அடியும், சிங்களப் பேரினவாதத்திற்குமான எச்சரிக்கையும் ஆகும். அதாவது, ஒடுக்குமுறை அதிகரிக்க, அதிகரிக்க ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திர வேட்கையும், போரிடும் ஆற்றலும் அதிகரிக்குமே ஒழிய, ஒருபோதும் குறைந்து விடப் போவதில்லை. அதாவது, ஒடுக்குமுறைகளும், படுகொலைகளும் ஒருபோதும் ஓர் இனத்தின் விடுதலைப் போரைத் தடுத்து நிறுத்தி விடப்போவதில்லை. சிங்களப் பேரினவாதம் இதைப் புரியாது இருப்பினும், வரலாறு பொய்த்துப் போவதில்லை.

இருப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார்.

அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளஸ்ரன்மோர்கிரசன்ட் இல்லத்தில் தற்போது குடியேறி இருக்கும் அவர் கடந்த சில வாரங்களாக தமது இல்லத்தின் தளபாட அமைப்புகளில் தீவிர கவனம் செலுத்தியதாகவும் ஐலண்ட் பத்திரிகையாளரிடம் மேலும் தெரிவித்தார்.

ஜூலை முதல் திகதி ஜனாதிபதிமாளிகையைவிட்டுவெளியேறிய பின்னர் ஸ்ரன்மோர் கிரசன்ட் இல்லத்திலும் தமது கணவரின் இல்லமான விஜேராம மாவத்த வீட்டிலும் வசித்து வந்ததாகவும் குறிப்பிட்டதோடு விஜேராம மாவத்த இல்லம் இப்போது தமது மகனின் பொறுப்பில்

பாதுகாப்பு பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அதுபற்றி தான் திருப்தி கொண்டிருப்பதாக கூறினார். எனினும் இச்சந்திப்பின்போது அரசியல் விவகாரங்கள் பற்றியோ, சேவா வனிதா இயக்கம் பற்றியோ எதையும் கூற மறுத்து விட்டார்.

கடைகள் அனைத்தும் அண்மையில் பொலிசாரின் தீவிர பரிசோதனைக்கு இலக்காகியது. அதிகாலை நான்கு மணியளவில் இக் கடைகளை முற்றுகையிட்ட பொலிசார் அங்கிருந்த சகலரையும் தீவிர புலன் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

## குடிநீர் வழங்கலை விரிவாக்க மாநகரசபை முயற்சி

குருநகர் புனித யாகப்பர் ஆலய கிணற்றில் இருந்து கிடைக்கும் குடிநீரை குருநகர் கடற்கரை வீதியூடாக தெற்கே டார்மாடி வரை விஸ்தரிப்பதற்கான குழாய் அமைக்கும் பணியில் யாழ். மாநகரசபை நீர் வழங்கும் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக யாழ். மாநகரசபை நீர்வழங்கும் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் அண்ணாசிலை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ள குழாய் மேலும் விஸ்தரிக்கப்படுவதாகவும் குருநகரின் ஏனைய வீதிகளுக்கும் விஸ்தரிக்க போதியளவு குழாய்கள் யாழ். மாநகரசபையிடம் கைவசம் இல்லை எனவும் இவர் தெரிவித்தார். [17]

## தமிழக மீனவர்களுக்கு பூரண பாதுகாப்பு வேண்டும்

### - தனுஷ்கோடி ஆதித்தன் கோரிக்கை

[சென்னை]

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களிலிருந்து தமிழக மீனவர்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான தனுஷ்கோடி ஆதித்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் நரசிம்மராவை சந்தித்துப் பேசிய அவர் இதற்கான மனுவொன்றையும் அவரிடம் கையளித்தார்.

## காவிரி நதிநீர் வழங்க தமிழக அமைச்சர் கோரிக்கை

[சென்னை]

காவிரி பாசனப் பகுதியில் இருபத்தையாயிரம் ஹெக்டயர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிரைக் காப்பாற்ற காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி காவிரி நீரைத் திறந்து விடும்படி கர்நாடக அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று தமிழக வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், மேட்டூரில் தற்போதிருக்கும் நீரின் அளவு ஒரு வார காலத்திற்கு மட்டுமே போதுமானது எனவும் கூறியுள்ளார்.

## உதவிப்பணியில் ஈடுபட ஐ. நா. தயாராகவுள்ளது

(டில்லி)

இந்தியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கான உதவித் திட்டத்தில் பங்குபற்ற ஐக்கிய நாடுகள் சபை தயாராக இருப்பதாக செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் தாம் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## கல்வியறிவு வளர்ந்தால் நிர்வாகம் சிரமப்படலாம்

(மஸ்கெலியா)

தோட்டத்தில் இருப்பவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாக இருக்கின்ற இந்த நேரத்திலேயே அவர்களுக்குப் பதில் கூற முடியாதுள்ளது. அவர்கள் என்னென்னமோ சட்டம் எல்லாம் பேசுகிறார்கள். பாடசாலையையும் கட்டிக்கொடுத்து அவர்களுக்கு மேலும் வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டால் இன்னும் என்னபாடு படுத்துவார்களோ என்று தோட்ட நிர்வாகி ஒருவர் ஆதங்கப்பட்டார்.

மஸ்கெலியாப் பகுதியிலுள்ள தோட்டப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர் மேற்படி பாடசாலைக்காக காணிஒதுக்கும்படி தோட்ட நிர்வாகத்தைக் கோரியபோதேதோட்ட நிர்வாகி இவ்வாறு தெரிவித்தார்.

### அரசியல்தீர்வு காணவேண்டும்

சோமாலிய நெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்று விரைவில் காணப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார். வாஷிங்டனில் இத்தாலியப் பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபின் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில்: சோமாலியாவில் அமெரிக்கப் படையினர் சச்சரவுகளுக்கு முகம் கொடுப்பதும், சோமாலியர் பலர் உயிரிழப்பதும் தமக்கு தொடர்ந்து தலையிடியாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் சோமாலியாவிலிருந்து அமெரிக்க துருப்பினரை இயன்றவரை தாமதப் படுத்தாமல் நாடு திரும்ப செய்ய விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

### அரபாத் சீனாவிற்கு விஜயம்

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் சீன அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று பீக்கிங்கிற்கு விஜயம் செய்தார். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நோக்கங்களிற்கு சீனா நீண்ட காலமாகவே ஆதரவு தெரிவித்து வருகிறது என்பதும், அண்மையில் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதும் தெரிந்ததே.

## இந்தியா பாடுபடும்

பாலத்தீனிய மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியையும் தொடர்ந்தும் ஆதரிக்கப் போவதாக இந்தியா கூறியுள்ளது.

நியூயோர்க்கில் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் உரையாற்றிய இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

28. வீ. வே. விநாயகன் சித்திரவேல் மோகன் மட்டக்களப்பு.
29. திசைவீரன் சற்குணநாதன் சற்குணபேசன் கொடிகாமம்.
30. வீ. வே. ராவ் சின்னையா யோகேஸ்வரன் மட்டக்களப்பு.
31. வீ. வே. தயா பாரதிதேவி செல்லையா யாழ்ப்பாணம்.
32. வீ. வே. சுபத்திரா வாணி புவனேந்திரன் வல்வெட்டித்துறை.
33. லெப். காண்டி கனகரத்தினம் கனகேஸ்வரன் மாங்குளம்.
34. லெப். யூசி ஆறுமுகம்பிள்ளை சிறிசுந்தரம் வல்வெட்டித்துறை.
35. 2-ம் லெப். வாசு தேசிங்கம் தமிழ்ச்செல்வன் உடுப்பிட்டி.
36. வீ. வே. சுபாசினி புஸ்பரஞ்சினி (புஸ்பா) சுப்பிரமணியம் தாளையடி.
37. வீ. வே. கபிலன் மார்க்கண்டு குகமூர்த்தி மானிப்பாய்.
38. வீ. வே. சத்தியன் பூர்வானந்தஈஸ்வரசர்மா பாலரூப சர்மா துன்னாலை.
39. வீ.வே. குட்டியா சாந்தநாயகி விசுவலிங்கம் சாவகச்சேரி.
40. றெஜினோல்ட் சந்தனமேரி கணேஸ் மட்டக்களப்பு.
41. லெப். தர்மன்/ரவி இராசதுரை ரவீந்திரகுமார் கோப்பாய்.
42. வீ. வே. அனுசா ஜெசிந்தா குமாரசாமி ஏழாலை.
43. வீ. வே. கலாதரன் மாணிக்கம் தர்மராசா திருமலை.
44. வீ. வே. ரகீம்/சகீம் நாகலிங்கம் ஜெகதாஸ் உரும்பராய்.
45. வீ. வே. சரத்பாபு நவரெத்தினம் கோபிநாத் கொக்குவில்.
46. கப்டன் கீர்த்தி வீரப்பாபிள்ளை கனகேஸ்வரன் கொடிகாமம்.
47. வீ. வே. கில்பேட் ஜோசப் ஜொனி திருமலை
48. லெப். இக்பால் நாகலிங்கம் கிருஷ்ணகுமார் ,,
49. லெப். ராகுலன் வேலாயுதம் ஜெயரூபன் மட்டக்களப்பு
50. 2-ம் லெப். லஷ்மன் கிருஷ்ணன் இராமச்சந்திரன் அச்சுவேலி.
51. வீ. வே. பாபு அந்தோனி நிக்கலஸ் மட்டக்களப்பு.
52. வீ. வே. கபில் சித்திரவேலாயுதம் சசிக்குமார் திருமலை
53. வீ வே. சுணராஜ் அமிர்தலிங்கம் குமார் கிளிநொச்சி
54 வீ. வே. தவச்செல்வி சித்திராஞ்சலி இராமநாதன் மிருசுவில்.
55. வீ. வே. சிவபாலன் சின்னத்தம்பி ஜெயராஜ் சங்கானை
56. லெப். நிதி நடராசா ஜெயராசா மன்னார்.
57. லெப். புண்ணியமூர்த்தி சின்னத்தம்பி சிவகுமார் அம்பாறை.
58. கடற்கரும்புலி மேஜர் நிலவன் (வரதன்) கந்தசாமி இராசரத்தினம் மட்டக்களப்பு.
59. கடற்கரும்புலி மேஜர் புகழரசன் (புவீந்திரன்) சுப்பிரமணியம் நாககீரன் அரியாலை.
60. கடற்கரும்புலி கப்டன் மணியரசன் வேதநாயகம் ராஜரூபன் குடத்தனை.
61. கப்டன் மதன் சீனிவாசகம் சிவகுமார் மட்டக்களப்பு.

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மாவீரர் உருவப்படங்களும், கடற்கரும் புலிகள் நால்வரின் படங்களும் சிறு அன்பளிப்புச் செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை கொக்குவிலில் 8.30 மணி தொடக்கம் 4.30மணிவரையான நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் மணிமனை அறிவித்துள்ளது.

## சமாதானப் பேச்சுக்களை சிரியா மீறி வருகிறது

### இஸ்ரேல் குற்றச்சாட்டு

(அலெக்சாண்ட்ரியா)

இஸ்ரேலுடனான சமாதானப் பேச்சுக்களை சிரியா மீறி வருகிறது என்று இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக்ரபன் குற்றம் சாட்டியுள்ளார்.

அலெக்சாண்ட்ரியாவில் எகிப்திய ஜனாதிபதி கொஸ்னி முபாரக்குடன் பேச்சு நடத்திய அவர்மேலும்கூறுகையில், லெபனானிலுள்ள கெரில்லாக்களையும், சமாதான உடன்படிக்கையை எதிர்க்கும் குழுக்களையும் சிரியா தொடர்ந்து ஆதரித்து வருகிறது என்றும், ஒப்பந்தத்தை எதிர்க்கும் இத்தகைய பத்துக் குழுக்களுக்கு சிரியா அடைக்கலம் கொடுத்திருப்பதுடன் ஹிஸ்புல்லா இயக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

நாங்கள் கொடுப்பதைப் போலவே சிலவற்றைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேச்சுவார்த்தை சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது குறிப்பிடத்தக்கது.

# ஆனையிறவு சமருக்கு அடுத்த பெரும் சமர்

(கொழும்பு)

ஆனையிறவுச் சமருக்குப் பின் இராணுவம் சந்தித்த மிகப் பெரிய இழப்பு இது என புலோப்பளைப் பகுதியில் கடந்த புதனன்று நடந்த சண்டை குறித்து கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறிலங்கா அரசாங்கம் சற்றும் எதிர்பாராத எதிர்ப்பை சிறிலங்கா படையினர் 'யாழ்தேவி' நடவடிக்கையில் எதிர்கொண்டே கிளாலி நோக்கி முன்னேற வேண்டியிருந்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

நூற்றுக்கு மேற்பட்ட படையினர் இறந்தும் 200க்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்தும் உள்ளதாகவும் இது சிறிலங்கா படையினர் சற்றும் எதிர்பாராத ஒன்று எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களின் கருத்துகளில் இருந்து தெரியவருவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

கனரக இராணுவ தளபாடங்கள், யுத்தவிமானங்கள் கொண்ட இராணுவத்தினரை இவ்வாறு சிறியபடையொன்று எதிர்த்து இழப்பை ஏற்படுத்தியது எதிர்பாராத ஒன்று எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பருவமழை ஆரம்பிக்கவுள்ள காலத்தில் விடுதலைப் புலிகள் ஏற்கனவே எதிர்பார்த்திருந்த ஒரு தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள இராணுவம் எடுத்த முடிவுகுறித்து இராணுவ அவதானிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்தால் பிரதேசத்தை கைப்பற்றினாலும் அப்பிரதேசத்தைக் கட்டிக்காக்க முடியாத நிலையே இருப்பதாக ஒரு அதிகாரி தெரிவித்தார். பருவமழை ஆரம்பிக்கவுள்ள இந்த நேரத்தில் யுத்தத்தை தொடரமுடியாது எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பிற்போடப்பட்டுள்ளது

03. 10. 93-ம் திகதிஞாயிற்றுக்கிழமை பி. ப 2. 00 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவிருந்த கலைவிழா பிற்போடப்பட்டுள்ளது.

—விழா குழுவினர்

(6206)

## "இசை நிகழ்ச்சி"

03-10-1993 ஞாயிற்றுக்கிழமை அன்று இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெற இருந்த சாந்தன் குழுவினரின் இன்னிசை கானம் நிகழ்ச்சி தற்போதைய சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

—நல்லூர் இசை மன்றத்தினர்

(6204)

## மின் வழங்கல்

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கும் சேவை நடைபெற்று வருகின்றது. மின்சாரம் தேவைப்படுவோர் 15-10-93க்கு முன் எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். மேல் அதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மின் வாரியம்**

தமிழீழ வானொலித் தொடர்பகம்,
பழைய பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். [சி-7525]

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. நடராசா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவன் செல்வன் மகேஸ்வரனின் சகோதரனும் ஆகிய

**கப்டன் சேரன் (ஈசன்)**

## 'வாதுவ'வில் தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)


யாழ். பிரதான தபாலகத்திற்கான ஒரு தொகுதி தபால் பொதிகள் 'வாதுவ' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி கப்பல் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் யாழ். குடாநாட்டிற்கான உணவு மற்றும் பொருள்களை ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது. எனினும் இக் கப்பல் எப்போது பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் என்பது பற்றி அறிய முடியவில்லை. (பா)

## துப்பாக்கிச் சூடு

[குருநகர்]

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதி சிறிலங்கா இராணுவக் காவலரண்களில் இருந்து நேற்று பிற்பகல் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. [21]



புலோப்பளையில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட சிறிலங்கா இராணுவ டாங்கிகளில் ஒன்று எரிந்து கொண்டிருக்கிறது.

புலோப்பளை மோதலில் வீரச்சாவடைந்த

## மாவீரர்களுக்கு நினைவுக்கல் இன்று நாட்டப்படும்

புலோப்பளை அல்லிப்பளைப் பகுதியில் கடந்த புதனன்று சிறிலங்கா இராணுவம் முன்னேறமுயன்ற வேளை ஏற்பட்ட சமரில் விழுப்புண் ஏற்று யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பெறுகையில் நேற்று வீரச்சாவைத் தழுவிய வீரவேங்கை காவேரி அவர்களின் வித்துடல் கோப்பாயிலிருந்தும் அல்லிப்பளைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவைத் தழுவிய மேஜர் குமரன் வீ. வே. ஜெனார்த்தனி, லெப். குயிலி லெப். அன்பழகி-அபி 2ம் லெப். காரணி. வீ. வே. துவாரகா திருவுருவப்படங்களும் சித்தன் கேணி பிளவத்தை அமெரிக்கன் மிசன் பாடசாலையில் இன்று பி. ப. 3. 00 மணியளவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற்றதும் அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தை அடைந்து அங்கு இறுதி இராணுவ மரியாதைகளின் பின் வித்துடல் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டும், ஏனைய அறுவரின் நினைவாக நினைவுக்கற்களும் நாட்டப்படும்.

புலோப்பளை, அல்லிப்பளைப் பகுதியில் புதனன்று முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவைத் தழுவிய வீரவேங்கை வெங்டேஸ்வரன் அவர்களின் திருவுருவப் படம் இன்று அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துவரப்பட்டு மந்துவில் லெப் பைக் சனசமூக

# 9 அதிகாரிகள் உட்பட 114 படையினர் பலியாம்

[கொழும்பு]

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையில் 9 அதிகாரிகள் உட்பட 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 248 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் 9 அதிகாரிகள் உட்பட 114 படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு செயற்பாட்டுத் தலைமையகம் கணக்கிட்டுள்ளது.

திறந்த வெளி மூலமாக போரிடுவதால் இராணுவத்தினர் பலர் உயிரிழந்துள்ளதாகவும் ஆனால் திறந்தவெளி ... ணுவப்பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று தெரிவித்தார்.

## நீர்வேலியில் இருவர் காயம்

நீர்வேலி சந்தியடியில் உலங்குவானூர்தி மேற்கொண்ட கலிபர், றொக்கட் தாக்குதலுக்கு இருவர்படுகாயமடைந்துள்ளனர்.

சிறிலங்கா விமானப்படை அண்மையில் கொள்வனவு செய்த புதிய கறுப்பு நிற உலங்குவானூர்தியே இத் தாக்குதலை நடாத்தியதாக காயமடைந்த ஒருவர்தெரிவித்

## சிறிமாவுடன் பேசுவதற்கு தமிழ்க் குழுக்கள் முயற்சி

அரசின் போக்கில் விரக்தியாம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பல தமிழ்க் குழுக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுக்கள் நடத்ததிட்டமிட்டுவருகின்றனர். அரசின் இராணுவ போக்கு தமிழ்க்கட்சிகளுக்கு விரக்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டிபியின்டக்ளஸ்தேவானந்தா திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை கடந்த வாரம் சந்தித்து இருமணி நேரம் பேசியுள்ளார். தற்போது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, டெலோ ஈ. பி. ஆர். எல் .எப் ஆகிய குழுக்கள் சிறிமாவோவுடன் பேச்சு நடத்ததிட்டமிட்டு வருகின்றனராம்.

## நிலநடுக்கத்தில் இறந்தோர் 21 ஆயிரமாக அதிகரிப்பு

[டில்லி]

மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக பல கிராமங்கள் பூண்டோடு அழிந்து போயிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருபத்தோராயிரமாக அதிகரித்துள்ளது. அதேவேளை இடிபாடுகளிற்குள்ளிருந்து சடலங்களை மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எட்டாயிரம் பேர் வரையில் உயிரிழந்திருப்பது ஊர்ஜிதமாக்கப்பட்டுள்ளது.

மீட்பு நடவடிக்கையில் இராணுவம் மற்றும் தொண்டர் நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:

பதிவு செய்து கொள்ளவும். மேல் அதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மின் வாரியம்**
தமிழீழ வானொலித் தொடர்பகம்,
பழைய பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். [சி-7525]

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. நடராசா அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவன் செல்வன் மகேஸ்வரனின் சகோதரனும் ஆகிய

### கப்டன் சேரன் (ஈசன்)

29-09-93இல் வீரச்சாவடைந்த செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைந்ததுடன் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

உயர்தர மாணவர் மன்றம்
கனகரத்தினம் ம.ம.வி. (6205)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்
24. 10. 1974

தமிழீழ விடிவிற்காக
2. 10 1992

கட்டைக்காட்டு ஆயுதக்கிடங்கு கைப்பற்றிய தாக்குதலில் வீரகாவியம் படைத்த.

### 2-ம் லெப்டினன்ட் பதுமன்

(முத்துத்தம்பி குகதாஸ்)
நிலாவெளி திருக்கோணமலை

வெஞ்சமரில் களமாடிய வேங்கை இவன்
தலைவன் அணியில் இணைந்திட்ட வீரன் இவன்
மரணித்தாலும் இந்தமண் உன்னை மறக்குமா?

இந் நிகழ்வில் சகல போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நிரந்தர முகவரி
நிலாவெளி
திருக்கோணமலை
(6209)

தற்போதைய முகவரி
மு. கமலாதேவி
22, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 114 படையினர் பலியாம்

[கொழும்பு]
வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையில் 9 அதிகாரிகள் உட்பட 150 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 248 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் 9 அதிகாரிகள் உட்பட 114 படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு செயற்பாட்டுத் தலைமையகம் கணக்கிட்டுள்ளது.

திறந்த வெளி மூலமாக போரிடுவதால் இராணுவத்தினர் பலர் உயிரிழந்துள்ளதாகவும் ஆனால் திறந்தவெளி போர் மூலம் போராளிகளின் மறைவிடங்களை அப்புறப் படுத்த உதவும் எனவும் இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று தெரிவித்தார்.

**தென்மராட்சியில்**
தென்னம் காணியில் விழுந்ததால் தென்னம் பிள்ளைகள் பல சேதமாகின. பாரியகுழிகளும் காணப்பட்டன. மேற்படி விமானத்தில் இருந்து கலிபர், ரொக்கட் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதன்போது வீதியால் சென்ற ஒருவர் சிறு காயமடைந்தார்.

இதனைத்தொடர்ந்து மீண்டும் மாலை 5.30 மணியளவில் வந்த உலங்கு வானூர்தி ஒன்று பாதசாரிகள்மீது எறிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டது. இதனால் இளைஞர் இருவர் படுகாயமடைந்தனர்.

தென்மராட்சிப் பகுதியில் விமானப்படை விமானங்கள் கண்மூடித்தனமான தாக்குதல்களால் வர்த்தக நிலையங்கள் சந்தை ஆகியன செயலிழந்துள்ளதுடன் மக்கள் நடமாட்டமும் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகிறது.
(சி).(86)

**க.பொ.த**
பாடங்கள் எடுத்த போதிலும் பல்கலைக் கழகத்தில் மூன்று பாடங்கள் மட்டுமே படிக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. கல்வி அமைச்சில் நடைபெறும் இந்த மாநாட்டிற்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் லொக்கு பண்டார தலைமை வகிப்பார்.

இப் புதிய திட்டத்தை எப்போது அமுல்படுத்துவது, க. பொ. த. பாடத்திற்கான புதிய பாடத்தை வகுப்பது, தாய்மொழி. ஆங்கிலம், கலாசார பாடங்களைப் போதிப்பது அந்த வினாப் பத்திரங்களைத் தயாரிப்பது போன்ற விடயங்கள் பற்றி மேற்படி மாநாட்டில் முடிவு செய்யப்படும்.

## நீர்வேலியில் இருவர் காயம்

நீர்வேலி சந்தியடியில் உலங்கு வானூர்தி மேற்கொண்ட கலிபர், றொக்கட் தாக்குதலுக்கு இருவர்படுகாயமடைந்துள்ளனர்.

சிறிலங்கா விமானப்படை அண்மையில் கொள்வனவு செய்த புதிய கறுப்பு நிற உலங்கு வானூர்தியே இத் தாக்குதலை நடாத்தியதாக காயமடைந்த ஒருவர்தெரிவித்தார்.

நேற்று பகல் 11-00மணியளவில் நீர்வேலிச் சந்திக்கண்மையில்உள்ள லொறி கராஜ்ஜை நோக்கியே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதலின்போது பொன்னர் நவரட்ணம் (வயது 47), ஆர் பாலச்சந்திரன் ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

**முற்றுகையை**
லியை அவர்கள் முக்கிய போக்குவரத்து பாதையாக கருதவில்லை. அவர்கள் பல்வேறு பாதையை பயன்படுத்துகின்றனர்.

இது பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய படை நடவடிக்கையேஎன்றும் திலகர் பேட்டியில் குறிப்பிட்டார்.

கிளாலி குறித்து இருதரப்புமே விட்டுக்கொடுப்பதாக இல்லையே எனக்கேட்டபோது, ''அரசு தமிழீழ பகுதிகளை ஆக்கிரமிக்க விரும்புகிறது. அந்நிலையில் தமிழ் மக்களை நிரந்தரமாக அடிமையாக்குகின்ற மண்ணைநிரந்தரமாக பறிகொடுக்கின்ற செயற்பாட்டுக்கு எதிராக தமிழ் மக்கள்செயற்படவேண்டியுள்ளது நிரந்தர அவலங்களை தவிர்க்க, நிரந்தர பாதுகாப்பை அளிக்க, நாம் அரசின் இந்த ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராடும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளோம்.

அமைச்சர் தொண்டமான் அண்மையில்சமரசதிட்டத்தை முன்வைத்திருப்பதாக கூறியிருந்தார். அந் நிலையில் அரசபடைகள் தற்போது திடீரென பாரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளனரே அமைதி திட்டம் கைவிடப்பட்டு விட்டதா? என கேட்கப்பட்டபோது ''அரசைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினையே இல்லை என்றும் இராணுவ ரீதியாக தீர்க்கக்கூடிய பிரச்சினையே உள்ளது என்றும் கூறுகிறது. எனவே எந்தவித சமாதான முயற்சியையும் அது முன்னெடுக்க விரும்பவோ அல்லது எவராலும் முன்னெடுக்கப்பட்டால் ஏற்றுக் கொள்ளவோ அதனடிப்படையில் பேச்சு நடத்தவோ அது விரும்பவில்லை அரசு இராணுவ தீர்வையே நாடுகின்றது என்றார்.

தெரிவுக்குழுவின் சிபார்சுகள் இன்னமும் வெளிவராத நிலையிலேயே சிபார்சுகளை நிராகரித்துவிட்டீர்களா என கேட்டபோது பதிலளித்த திலகர் 'தெரிவுக்குழுவை ஆரம்பத்திலேயே புறக்கணித்துவிட்டோம். தெரிவுக்குழுவின் சிபார்சுகளை ஏற்க நாம் தயாராக வில்லை'' என்றார்.

நிறைவுற்றதும் அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தை அடைந்து அங்கு இறுதி இராணுவ மரியாதைகளின் பின் வித்துடல் புனித விதைகுழியில் விதைக்கப்படும், ஏனைய அறுவரின் நினைவாக நினைவுக் கற்களும் நாட்டப்படும்.

புலோப்பளை, அல்லிப்பளைப் பகுதியில் புதனன்று முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவைத் தழுவிய வீர வேங்கை வெங்டேஸ்வரன் அவர்களின் திருவுருவப் படம் இன்று அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துவரப்பட்டு மந்துவில் லெப் பைக் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளின் பின்னர் அவரது நினைவாக நினைவுக்கல் நாட்டப்படும்.

புலோப்பளை, அல்லிப்பளைப் பகுதியில் புதனன்று முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவை தழுவியவர்களான கப்டன் சாந்தன்-மோகனரூபன், 2 ம் லெப். செல்வம்-தனா ஆகியோரினது திருவுருவப் படங்கள் அவர்களது இல்லங்களிலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் இன்று எடுத்துவரப்பட்டு பி.ப. 3.00 மணியளவில் நெல்லியடிச்சந்தியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நடைபெற்று நிறைவுற அங்கிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் எல்லங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளின் பின்னர் இருவரினதும் நினைவுக் கற்கள் நாட்டப்படும்.

# 21 ஆயிரமாக அதிகரிப்பு

[டில்லி]
மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக பல கிராமங்கள் பூண்டோடு அழிந்து போயிருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருபத்தோராயிரமாக அதிகரித்துள்ளது. அதேவேளை இடிபாடுகளிற்குள்ளிருந்து சடலங்களை மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எட்டாயிரம் பேர் வரையில் உயிரிழந்திருப்பது ஊர்ஜிதமாக்கப்பட்டுள்ளது.

மீட்பு நடவடிக்கையில் இராணுவம் மற்றும் தொண்டர் நிறுவனங்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:
03-05 1969

வீரச்சாவு:
29-09 1993

29-09-93-ல் இயக்கச்சி - அல்லிப்பளைப் பகுதியில் நடைபெற்ற சமரில் வீரமரணமெய்திய எமது சகோதரன்

### மேஜர் குமரன்

[மணியம் சிறீசிவநாதன் - பம்பைமடுச் சந்தி - வவுனியா
தற்போதைய முகவரி: மானிப்பாய் றோட், ஐந்துசந்தி
ஆசாத் வீதி, யாழ்ப்பாணம்]

இவரின் உருவப் படம் இன்று 2 10-93 பி. ப. 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக் கல் நாட்டப்படும் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

[இ] தந்தை, சகோதரர்கள்

## மரண அறிவித்தல்

திருமதி
**வேலுப்பிள்ளை இரத்தினபூபதி**
(பெரியமாவடி, சாவகச்சேரி)

திருமதி வேலுப்பிள்ளை இரத்தினபூபதி அவர்கள் காலமானார். அன்னார் வேலுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், டிறிபேக் கல்லூரி, அவர்களின் அன்பு மனைவியும், நமசிவாய சேயோன் அவர்களின் அன்புத் தாயாரும், ந. மதியின் அன்பு மாமியாரும், துளசிதரனின் பாசப் பேர்த்தியாரும். காலஞ்சென்ற திரு. திருமகிகார்த்திகேசு (ஆசிரியர் மீசாலை தெற்கு) அவர்களின் அன்பு மகளும், நடராசலிங்கம், தில்லை நடேசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 2-10 93 (இன்று) சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு ''சேயோனகம்'' பெரியமாவடி, சாவகச்சேரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. வேலுப்பிள்ளை (ஆசிரியர்)
(கணவன்)

''சேயோனகம்''
கச்சாய் வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி. (6208)